Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 015 | புதன்கிழமை Wednesday | 15.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# தொகுதி மறுவரையறை : “தமிழ்நாடு ஸ்தம்பிக்கும்”

## முதலமைச்சர் ஸ்டாலின் மத்திய அரசுக்கு எச்சரிக்கை



சென்னை: "தமிழ்நாட்டை பாதிக்கும்படியோ, வட மாநிலங்களுக்கு அரசியல் வலிமையை கூட்டும்படியோ தொகுதி வரையறை நடந்தால் சும்மா இருக்க மாட்டோம். தமிழ்நாடு தன் எதிர்ப்பை கடுமையாக காட்டும். நீங்கள் இதுவரை பார்க்காத தமிழ்நாட்டை பார்க்க வேண்டியிருக்கும்" என முதல்வர் ஸ்டாலின் மத்தியஅரசுக்குஎச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்தது அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில், "தேர்தல் பிரசாரத்துக்காக, நிற்காமல் ஓடிக் கொண்டே இருந்தாலும், இந்தக் கடமையை தவிர்க்க முடியாது.

ஏப்ரல் 16, நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் கூடுகிறது. கூடுகிறது என்று சொல்வதைவிட, தமிழ்நாடு – மேற்கு வங்கத் தேர்தலுக்கு இடையில் வலுக்கட்டாயமாகக் கூட்டப்படுகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

'Delimitation' என்ற தொகுதி மறுவரையறை தொடர்பாக அரசியல் சட்டத் திருத்தத்தை இந்தத் தொடரில் புல்டோஸ் செய்யப் போகிறார்கள். முதலில் இருந்தே இது பற்றி நாம் தொடர்ந்து எச்சரித்தோம். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்தியாமுழுவதும்இருந்து, இதனால் பாதிப்படையவுள்ள மாநில முதலமைச்சர்களையும்–முக்கியக் கட்சித் தலைவர்களையும் சென்னைக்கு அழைத்து, கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டம் நடத்தினோம். "மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துங்கள்; அளவாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள், குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைபிடியுங்கள்" என ஒன்றிய அரசு சொன்னதையெல்லாம் நாங்கள் கேட்டோம். சொன்னதை ஒழுங்காகச் செய்ததற்காகவே எங்களுக்குத் தண்டனை தருவீர்களா? "தென்மாநிலங்கள் பாதிப்படையாது" என நாடாளுமன்றத்தில் வைத்துப் பிரதமர் அவர்கள் உத்தரவாதம் தர வேண்டும் என்று கேட்டோம். பதில் இல்லை. இதுக்காகப் பல்வேறு கட்சி எம்.பி.க்கள் பிரதமரை நேரில் சந்தித்து முறையிட நேரம் கேட்டோம். அதுவும் கிடைக்கவில்லை.

இப்படி, நாம் சொன்ன எதையும் அவர்கள் காதில் வாங்காமல், திமுகமட்டுமல்ல;எந்தக் கட்சியோடும் – எந்த மாநிலத்தோடும் – எந்த ஆலோசனையும் நடத்தாமல், அவர்கள் இஷ்டத்துக்கு செய்யப் பார்க்கிறார்கள். நேற்று, மரியாதைக்குரிய அம்மையார் சோனியா காந்தி அவர்களும், நாம் கேட்கும் அதே கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்! பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் உள்ளிட்ட யாருக்குமே பதில் இல்லை!

இப்படி அவசரக அவசரமாக 'Delimitation' செய்யநினைப்பது,பாஜக அரசின் அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயல்! இன்னும் சொன்னால்,மாநில உரிமைகளைப் படுகொலை செய்திருக்கிறார்கள். இந்த Delimitation–ஐஎப்படி செய்ய போகிறார்கள் என்று தெரியவில்லை. அந்தச் சட்டத் திருத்தம் என்ன என்பது பற்றி, இதுவரை எந்த விளக்கத்தையும் கொடுக்காமல் இருக்கிறார்கள்.

இவர்கள் இப்படி மறைத்து மறைத்துச் செய்கிறார்கள் என்றால், கண்டிப்பாக ஏதோ பெரிய ஆபத்து இருக்கிறது என்று,அனைவருக்குமே அந்தச் சந்தேகம் வலுவடைகிறது. தென்மாநில மக்கள் பெரும் அச்சத்தில் இருக்கிறார்கள். நான் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கும் , பிரதமர் மோடிக்கும், இந்த நேரத்தில் முக்கியமாக ஒன்றுசொல்லிக்கொள்கிறேன். நடக்க இருக்கும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில், எங்கள் எம்.பி.க்கள் கலந்து கொள்வார்கள். தமிழ்நாட்டை பாதிப்பது போன்றோ, வடமாநிலங்களுக்கு அரசியல் வலிமையை மேலும் வாரி வழங்குவது போன்றோ,ஏதாவது நடந்தால், தமிழ்நாட்டில் இருக்கும் நாங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம். தமிழ்நாடே ஸ்தம்பிக்கும்.தமிழ்நாடு தனது எதிர்ப்பைக் கடுமையாகக் காட்டும். ஒவ்வொரு குடும்பமும் தெருவில் வந்து உட்காருவோம். தமிழ்நாடு முதலமைச்சராக இருக்கும் என்னுடைய தலைமையிலேயே மிகப்பெரிய போராட்டம் நடத்துவோம்.

"இது தேர்தல் காலம்தானே!" "இவர்கள் கவனம் அதில்தான் இருக்கும்!" "நாம் டெல்லியில் சைலண்டாகத் தமிழ்நாட்டின் தொகுதி மறுவரையறை செய்து விடலாம்" என்று மட்டும் நினைக்கவே நினைக்காதீர்கள்.

சொல்லும்நான்தமிழ்நாட்டு முதலமைச்சர் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கத்தின் தலைவர். நீங்கள் இதுவரை பார்க்காத தமிழ்நாட்டைப்பார்க்கவேண்டியிருக்கும். 50–கள், 60–களில் பார்த்த பழைய திமுகவை இந்தியா மீண்டும் பார்க்கவேண்டியிருக்கும்.

"என்ன இவன் மிரட்டுகிறான்?" என்று நினைக்காதீர்கள். நான் உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் அதை மிரட்டல்என்றுநினைத்தாலும் எங்களுக்குக் கவலையில்லை. ஆம், தமிழ்நாட்டில் இருந்து அனுப்பி வைக்கப்படும் எச்சரிக்கை இது. தேர்தல், ஆட்சி அதிகாரம் இது எல்லாம் எங்களுக்கு இரண்டாம் பட்சம்தான்.நாங்கள் சுயமரியாதைக்காரர்கள்! எங்களுக்குக் கொள்கைதான் முக்கியம்! மாநில உரிமைகள்தான் முக்கியம். அதுதான், அண்ணாவும் – கலைஞரும் எங்களுக்குக் கொடுத்துவிட்டுச் சென்றஉயிர்க்கொள்கை.

தமிழ்நாட்டுக்குத் தவறிழைத்துவிட்டு, வழக்கம்போல் சும்மாகடந்துசெல்ல நினைத்தால், நடப்பதே வேறு!. சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளில், அவர் மேல் ஆணையாகச் சொல்கிறேன். தமிழ்நாடு பாதிக்கப்பட்டால், இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துவிடுவோம்.பிரதமர்மோடியே மீண்டும் சொல்கிறேன்... இது தமிழ்நாட்டில் இருந்து உங்களை நோக்கி விடுக்கப்படும் இறுதி எச்சரிக்கை" என தெரிவித்துள்ளார்.

# தான் விவசாயக் குடும்பத்தில் பிறந்து வறுமையை உணர்ந்தவன்

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேச்சு

திண்டுக்கல்: தான் விவசாயக் குடும்பத்தில் பிறந்து வறுமையை உணர்ந்தவன் என்றும், முதலமைச்சர்ஸ்டாலின் செல்வ செழிப்பில் வளர்ந்தவர் எனவும் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத்தொகுதிகளில்போட்டியிடும் அதிமுக வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் செய்தார்.

பிரச்சாரத்தில் அவர் பேசுகையில், "அதிமுகவை எதிர்க்க தில், திராணி, தெம்பு திமுகவுக்கு இல்லை. அப்படி தில் இருந்தால், எங்கள் நிர்வாகத்தை பற்றி பேசுங்கள். அதை விட்டுவிட்டு தமிழ்நாட்டிற்கும், டெல்லிக்கும் போட்டி, எடப்பாடி பழனிச்சாமி டெல்லிக்கு அடிமை என பேசுகிறார் ஸ்டாலின்.

மக்களை விட கிரிக்கெட்தான் முக்கியமா?

திமுக ஆட்சியை அகற்ற நடக்கும் தேர்தல் இது. அதை மறந்துவிட்டு டெல்லிக்கும், தமிழ்நாட்டிற்கும்தான்போட்டி என்கிறார். இது என்ன கிரிக்கெட்டா? நடைபெறவிருப்பது சட்டமன்ற தேர்தல். இங்கு அரசியல் பேச வேண்டும். கிரிக்கெட்டை பற்றி பேசக் கூடாது.

அன்றைக்கு ஒரு கூட்டத்தில், காரில் செல்லும் போது கிரிக்கெட் பார்ப்பேன் என ஸ்டாலின் கூறுகிறார். மக்கள் பிரச்சனைகளை பற்றி சிந்திக்காமல்,கிரிக்கெட் பார்க்கும் முதலமைச்சர் நமக்கு தேவைதானா?





தமிழ்நாட்டில் உள்ள பிரச்சனைகள் பற்றி கூட முதலமைச்சர் ஸ்டாலினுக்கு தெரியாது. மக்கள் படும் கஷ்டத்தை அவர் உணர மாட்டார். ஏன் தெரியுமா? அவர் பிறந்தது முதல் செல்வ செழிப்பில் வளர்ந்தவர். ஆனால், நான் சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்து, கஷ்டம் என்றால் என்ன,வறுமை என்றால் என்ன என உணர்ந்து வளர்ந்தவன்.

அதனால்தான், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் குடும்பத்துக்கு ரூ.10 ஆயிரம் கொடுப்பேன் என நான் வாக்குறுதி அளித்திருக்கிறேன். ஆனால், ஸ்டாலினோ கூப்பன் தருவேன் என்கிறார்.

கூப்பன் கொடுத்தால்–தானே ஊழல் செய்ய முடியும். மக்களின் பணத்தை எந்தெந்த வகையில் சுருட்ட முடியுமோ அந்தந்த வழிகளில் சுருட்டும் கட்சி திமுக.

அதிமுக ஆட்சியில் அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு 7.5 சதவீத இடஒதுக்கீடு கொண்டுவரப்பட்டு, இன்று 3000பேர் மருத்துவக் கல்லூரியில் பயில்கின்றனர். அதிமுக ஆட்சிக்காலத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட 'அம்மா மினி கிளினிக்குள்' தொடங்கப்பட்டன. ஆனால் ஆட்சி மாறியதும் அவற்றை எல்லாம் ஸ்டாலின் மூடிவிட்டார்.

ஏழைகளுக்குசிகிச்சை அளிப்பதைகூடபொறுத்துக்கொள்ள முடியாத அரசியல் காழ்புணர்ச்சி கொண்டவர்தான் இந்த ஸ்டாலின்.

ஒரு குடும்பத்திற்காகவே இயங்கும் கட்சிதான் திமுக. மக்களுக்காக இருக்கின்ற ஒரே கட்சி அதிமுக மட்டும்தான். மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் அம்மா மினி கிளினிக் திறக்கப்படும் என இங்கு உறுதியளிக்கிறேன்.

அதேபோல, அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் குடிமராமத்து திட்டம் தொடரும். விவசாயிகள் இலவசமாக மண் எடுத்துக்கொள்ளலாம். விவசாய கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்.

'மூன்றே மாதத்தில் கஞ்சாவை ஒழிப்பேன்'

அதிமுக ஆட்சிக்காலத்தில் சட்டம் – ஒழுங்கு சீராக இருந்தது. ஆனால், திமுக ஆட்சிக்காலத்தில் என்ன நடக்கிறது? கஞ்சா விற்பனை அமோகமாக நடக்கிறது. போதை ஆசாமிகளால்தான் குற்றம் அதிகரித்திருக்கிறது. இளைஞர்கள் கஞ்சாவுக்கு அடிமையாகி அவர்கள் வாழ்க்கைசீரழிகிறது.

பாலியல் வன்கொடுமை நடக்கவும் கஞ்சா போதைஆசாமிகள்தான் காரணம். அதிமுக ஆட்சிக்கு வந்த மூன்றே மாதத்தில் தமிழகத்தில் கஞ்சா முழுமையாக ஒழிக்கப்படும்.

எடப்பாடி பழனிச்சாமி பாஜகவுக்கு அடிமையாக இருக்கிறார் என உதயநிதி ஸ்டாலின் சொல்கிறார். பாஜகவுடன் திமுக கூட்டணி வைத்ததால்தான், முரசொலிமாறன் மத்திய அமைச்சர் பதவியில் இருந்தார்.

உதயநிதி அவர்களே உங்கள் தாத்தா கூட்டணி வைத்தால் சரி. நாங்கள் வைத்தால் மதவாத கட்சியா? நாம் சொல்வதற்கு முன்பே நரேந்திர மோடி மிகவும் நல்லவர் என புகழாரம் சூட்டியவரே கருணாநிதிதான் (செய்தித்தாளை எடுத்து காட்டுகிறார்). குஜராத்தில் மோடி நல்லாட்சி வழங்கினார் என கூறியவர் கருணாநிதி. ஆனால், இப்போது சிறுபான்மை மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற திமுக நாடகம் போடுகிறது" என எடப்பாடி பழனிசாமி பேசினார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,280 உயர்வு

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை (ஏப்.14) சென்னையில் பவுனுக்கு ரூ.1,280 என உயர்ந்துள்ளது. இதே போல வெள்ளியின் விலை கிலோவுக்கு ரூ.5,000 உயர்ந்துள்ளது.



சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

அமெரிக்கா – ஈரான் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைதோல்வி அடைந்தது. இதையடுத்து மேற்காசியாவில் போர் பதற்றம் மீண்டும் அதிகரித்துள்ளது. ஹார்முஸ்ஸ் ஜலசந்தியை முற்றுகையிடப் போவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதன் எதிரொலியாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெயின் விலை உயர்ந்துள்ளது. இந்த சூழலில் நேற்று தங்கம் விலை குறைந்த நிலையில், தங்கம் விலை உயர்ந்துள்ளது.

சென்னையில் வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.160 மற்றும் பவுனுக்கு ரூ.1,280 என விலை உயர்ந்துள்ளது. இதனால் ஒருகிராம்தங்கம் ரூ.14,220–க்கும், ஒரு பவுன் ரூ.1,13,760–க்கும் விற்பனை ஆகிறது.

24 காரட் தங்கம் ஒரு கிராம் ரூ.15,513 மற்றும் ஒரு பவுன் ரூ.1,24,104–க்கும் விற்பனை ஆகிறது. 18 காரட் தங்கம் இன்று ஒரு கிராம் ரூ.11,865 மற்றும் ஒரு பவுன் ரூ.94,920–க்கும் விற்பனை ஆகிறது. வெள்ளி கிராமுக்கு ரூ.5 என உயர்ந்து, ஒரு கிராம் ரூ.265–க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.5,000 உயர்ந்து, ஒரு கிலோ ரூ.2,65,000–க்கும் விற்பனை ஆகிறது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்
DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில்**
**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt




சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளர் கிழக்கு மாவட்ட செயலாளர் டாக்டர் பிரபு முன்னிலையில் அ.ம.மு.க மாவட்ட துணைச் செயலாளர் மருங்கிப்பட்டி ரமேஷ் தலைமையில் 2000 இருக்கும் மேற்பட்டோர் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தனர். சிறியவர்கள்முதல்பெரியவர்கள்வரைஆடல்பாடலுடன்வந்த அவர்களை சிவகங்கை கிழக்கு மாவட்ட செயலாளரும் காரைக்குடி தொகுதி வேட்பாளர் ஆன டாக்டர் பிரபுவரவேற்றார்பின்னர்புதியஉறுப்பினர்களுக்குகட்சியின்துண்டுஅணிவிக்கப்பட்டது இதனைத் தொடர்ந்து பேசிய டாக்டர் பிரபு பல்வேறு கட்சிகளை சேர்ந்தோர் தொடர்ந்து தமிழக வெற்றிக்கழக த்தில் இணைந்து வருவதாகவும் தலைவர் விஜய் காரைக்குடிக்கு வருகைக்குப்பின் இந்த கட்சியின் வெற்றி உறுதியாகி உள்ளதாகவும் தெரிவித்தார்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அண்ணல் அம்பேத்கார் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு இன்று மதரத் சார்மற்ற முற்போக்கு கூட்டணியின் காரைக்குடி சட்டமன்ற தொகுதிவெற்றிவேட்பாளர்திருஎஸ்மாங்குடிஅவர்கள்அண்ணல்அம்பேத்கார்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



தூத்துக்குடியில் அம்பேத்கரின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்குபை.மூ.ராமஜெயம்மாலைஅணிவித்துமரியாதைசெலுத்தினார். அம்பேத்கரின் 135வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையம் எதிரில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ. ராமஜெயம் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# பெண்களின் கல்வி, வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

## வாசுதேவநல்லூர் பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி பேச்சு

பெண்கள்நினைத்தால் சமூகத்தை முன்னேற்ற முடியும், ஆகவே பெண்களின் முன்னேற்றத்துக்காக கல்வி, வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று



தேர்தல் பிரச்சாரத்தின்போது வாசுதேவநல்லூர் பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி பேசினார்.

வாசுதேவநல்லூர்சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற தீவிர தேர்தல் பிரச்சாரத்தின் போது, பாஜக வெற்றி வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி பல்வேறு ஊர்களில் பொதுமக்களை நேரடியாக சந்தித்து வாக்கு சேகரித்தார்.

மேலத்திருவேங்கடநல்லூர், திருவேங்கடநல்லூர், வெட்டம்பட்டி, கீழத்திருவேங்கடநல்லூர், மதத்துப்பட்டி, பெரியசாமியாபுரம், அரியநாயகிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற சந்திப்புகளில் பெண்கள் அதிக அளவில் கலந்து கொண்டு தங்களது தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை முன்வைத்தனர்.

பெண்கள் நலனைக் கருத்தில் கொண்டு, ஆனந்தன் அய்யாசாமி பல முக்கிய வாக்குறுதிகளை முன்வைத்தார். அவர் பேசுகையில், கடந்த ஆண்டுகளில் செய்தது போலவே தொடர்ந்து பட்டதாரி பெண்களுக்கு இலவசடியூசன்&போட்டித்தேர்வுபயிற்சிஅளிக்கப்படும். இதற்காக பயிற்சி மையங்கள் அமைக்கப்படும். அதேப்போல பெண்கள் அரசு வேலைபெறசிறப்பு பயிற்சி மற்றும் வழிகாட்டல் மையங்கள் உருவாக்கப்படும். நமது வாசுதேவநல்லூர் தொகுதியில் சுயதொழில் தொடங்க பெண்களுக்கு பயிற்சி, நிதி ஆதரவு, டிஜிட்டல் திறன் பயிற்சி, ஊக்கத் தொகை, சந்தை இணைப்பு போன்றவை செய்து கொடுக்கப்படும்.

பெண்களின் பொருளாதார சுயநிலை உயர்ந்தால் குடும்பமும், சமூகமும் முன்னேறும்" என்ற அடிப்படையில், பெண்கள் வேலைவாய்ப்பு, தொழில் முனைவு மற்றும் கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

இந்த பிரச்சார நிகழ்வில் கட்சி நிர்வாகிகள், உள்ளூர் தலைவர்கள் மற்றும்பெண்கள் உட்பட ஏராளமான பொதுமக்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் பெரியகுளம் பழைய பேருந்து நிலையம் அருகே சட்டமேதை அம்பேத்கார் அவர்களின் 135 வது பிறந்த நாளை முன்னிட்டு அவருடைய திருஉருவ சிலைக்கு முன்னாள் முதலமைச்சர் திமுக போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் ஓ. பன்னீர்செல்வம், பெரியகுளம் தனி சட்டமன்ற தொகுதி கூட்டணி கட்சி வேட்பாளர் சக்திவேல், மலர் தூவி மாலை அணிவித்தனர். இந்நிகழ்வின் பொழுது தேனி மாவட்டம் எ.ம்.பி தங்க தமிழ்ச்செல்வம், முன்னாள் பெரியகுளம் சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ, கே.எஸ்.சரவணகுமார், தேனி மாவட்ட வி.சி.க செயலாளர் சுசி பாண்டி திமுக ஒன்றிய செயலாளர் எல். எம். பாண்டி மற்றும் பேரூராட்சி தலைவர்கள் அனைத்து கட்சி நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள்விழா: உளுந்தூர்பேட்டையில் திமுக வேட்பாளர் ஜி.ஆர்.வசந்தவேல் மரியாதை

உளுந்தூர்பேட்டை பேருந்து நிறுத்தத்தில் அமைந்துள்ள அண்-



ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, அவரது பிறந்த நாளைமுன்னிட்டுதிமுக மற்றும் கூட்டணி கட்சிகள் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

உளுந்தூர்பேட்டை தொகுதி திமுக வேட்பாளர் . ஜி.ஆர். வசந்தவேல் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நகர செயலாளர் டேனியல் ராஜ், ஒன்றிய செயலாளர் வைத்தியநாதன், நகரமன்றதலைவர் திருநாவுக்கரசு, இளைஞரணிசெயலாளர்மனோபாலன், முருகவேல் மற்றும்நகரமன்றஉறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில்திமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் திரளாகக் கலந்து கொண்டனர். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கிக் கொண்டாடப்பட்டது.

# ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து பகுதிகளில் திமுக வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் வாக்குசேகரிப்பு

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக



வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து பகுதிகளில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துக்கூறி உதயசூரியன் சின்னத்தில்வாக்களித்து தன்னை வெற்றி பெறச் செய்யுமாறு திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்களுடன்பிரசாரத்தில் வாக்குகள் சேகரித்தார்.

நிகழ்வின்போது தூத்துக்குடி மாவட்டத் துணைச் செயலாளரும் தூத்துக்குடி கிழக்கு ஒன்றிய மாப்பிள்ளையூரணி தேர்தல் பொறுப்பாளர் ஜெயக்குமார்ரூபன், ஒன்றிய செயலாளர் சரவணகுமார், ஒன்றிய துணை செயலாளர் கணேசன், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்அந்தோணிதனுஷ் பாலன், மாவட்ட வர்த்தகர் அணி பிளோமின்ராஜ்,மாவட்ட இளைஞரணி ஸ்டாலின், ஒன்றிய இளைஞரணி பால்துரை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் நெல்சன், ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன், மகளீரணி ஆரோக்கியமேரி, கிளை செயலாளர் ஜேசுராஜ், ஜோதிடர் முருகன், சேவியர், பாரதி, தர்மலிங்கம், பொன்னுச்சாமி, இம்மானுவேல், பாரி மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்ட திரளானோர் உடனிருந்தனர்.

# பலூன்கள் பறக்க... சித்திரை திருநாளை உற்சாகமாக வரவேற்ற தேவகோட்டை பள்ளி மாணவர்கள்




சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் சித்திரை திருநாளை முன்னிட்டு வண்ணமயமான பலூன்களை ஆகாயத்தில் பறக்கவிட்டு உற்சாகமாக வரவேற்றனர்.

சித்திரைத் திருநாளை முன்னிட்டு பள்ளி மாணவர்களிடையே கொண்டாட்டம் நிறைந்த சூழல் காணப்பட்டது. "திகட்டும் வரை தித்திக்கட்டும் சித்திரை திருநாளே வருக! வருக!" என்ற முழக்கத்துடன் மாணவர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்த நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் லெ . சொக்கலிங்கம் மற்றும் ஆசிரியைகள் முத்துலெட்சுமி, முத்துமீனாள் உட்பட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டு, சித்திரை திருநாளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். மேலும், பாரம்பரிய பண்பாட்டை பேணும் வகையில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நிகழ்ச்சியின் நிறைவாக , அனைவரும் ஒன்றிணைந்து இனிய சித்திரை திருநாள் வாழ்த்துகளை பகிர்ந்து கொண்டனர்.

# திருப்புவனம் & இளையான்குடியில் வாக்காளர் பெருமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரித்த தமிழரசி ரவிக்குமார்




சிவகங்கை மாவட்டம் 2026 ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற உள்ள 17 வது தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, மானாமதுரை சட்டமன்ற தொகுதியில்உதயசூரியன்சின்னத்தில்போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவு பெற்றதிமுகவேட்பாளர்திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார்அவர்கள்14ஆம்தேதிசெவ்வாய்க்கிழமை காலை திருப்புவனம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட மடப்புரம், மடப்புரம் குடியிருப்பு, மஞ்சள்குடி, தேளி, கணக்கண்குடி, K.பெத்தானேந்தல், K.P.மணல்மேடு, K.பெத்தானேந்தல் குடியிருப்பு, சடங்கி, வெங்கட்டி, கருங்குளம், கருங்குளம் குடியிருப்பு, கானூர், கானூர் குடியிருப்பு, மழவராயனேந்தல், மழவராயனேந்தல் குடியிருப்பு, சம்பராயனேந்தல், T.வேலாங்குளம், தூதை, தூதை குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளில் வாக்காளர் பெருமக்களை நேரில் சந்தித்து கடந்த 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட நலத்திட்டங்களை எடுத்துக் கூறி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் இளையான்குடி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட சிறுபாலை குடியிருப்பு, சிறுபாலை, புலியூர், புலியூர் குடியிருப்பு, கல்வெளி பொட்டல், தரிகொம்பன், கோட்டையூர், தெற்கு கோட்டையூர்,வழக்காணி,அ.புதூர்,வாணி,கொம்படி மதுரை, ஆழிமதுரை, நகரகுடி, உலகமணியேந்தல், திருவுடையார்புரம், குமாரக்குறிச்சி, சுந்தனேந்தல், மொச்சியனேந்தல், நாகநாதபுரம், பெரும்பச்சேரி, மகாலெட்சுமி குடியிருப்பு, சுபாஷ் நகர், குணப்பனேந்தல், இளமனூர், இளமனூர் குடியிருப்பு, கண்ணத்தேவன் புலி, நடுக்குடியிருப்பு, தென்னழகாபுரி,N.அண்டக்குடிஉள்ளிட்டபகுதிகளில் வாக்காளர் பெருமக்களை நேரில் சந்தித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

மேலும் வாக்கு சேகரிப்பில் ஈடுபடும் தமிழரசி ரவிக்குமார் அவர்களுக்கு வாக்காளர் பெருமக்கள் சென்றஇடமெல்லாம்மிகச்சிறப்பானஆதரவுஅளித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் புத்தாண்டை முன்னிட்டு "விவசாயம் செழிக்கவும் மழை பெய்யவும்" வரவேற்போம்

திருப்பரங்குன்றம் முலவர் 4 சுவாமிகளும் தங்க கவசத்தில் அருள்பாலித்தனர் கிராமத்து பொதுமக்கள் சாமி தரிசனம் செய்து பொன்னேர் என்னும் நாலு ஏர் பூட்டி உழுதனர். மேலும் கிராமத்து கூலி நிர்ணயம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது*

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் மூலவர் கற்பக விநாயகர் சத்தியகிரீஸ்வரர் துர்க்கை அம்மன் சுப்ரமணியசாமி தெய்வானை அம்மன் பவளக்கனி பெருமாள் ஆகியோர் தங்க கவசத்தில் அருள் பாலித்தனர் மேலும் விவசாயம் செழிக்கவும் மழை பெய்திடவும் திருப்பரங்குன்றம் கிராமத்து விவசாயம் செய்யும் பொதுமக்கள் சார்பாக நாலு ஏர்பூட்டும்நிகழ்ச்சிநடைபெற்றது . இதனால் காலை விவசாய செய்யும் பொதுமக்கள் புத்தாடைஅணிந்து புதிய தார் குச்சி வாங்கி அதில்பூ சுற்றி திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு



சென்று சாமி தரிசனம் செய்தனர்.

அதன் பின்பு விவசாய பொதுமக்கள் கிரி வலம் வரும்போது மலைக்கு பின்புறம் அமைந்துள்ள கோயில் நிலத்தில் விவசாயம் செழிக்கவும் மழை பெய்யவும் பிரார்த்தனை செய்து நாலு ஏழு ஏர் உழுதார்கள்.

அதன் பின்பாக மலை குகைக் கோயில் அடிவாரத்தில் மதியம்12மணிக்கு கிராமத்து விவசாய மக்கள் ஒன்று அமர்ந்து கிராமத்து கூலி நிர்ணயம்

# தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கீதாஜீவன் 34,33,32,31 வார்டு பகுதியில் வீதி வீதியாக சென்று வாக்கு சேகரித்தார்

## பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிதி.மு.கவேட்பாளரும் அமைச்சருமான கீதாஜீவன் 34வது வார்டு 3ம் மைலில் பிரச்சாரத்தை தொடங்கி ஆசிரியர் காலணி மில்லர்புரம் பகுதி அண்ணாநகர் 1முதல் 12வரை உள்பட 33, 32, 31, ஆகிய வார்டுகளில் நடைபெற்ற பிரச்சாரத்திற்கு மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், வட்டச்செயலாளர்கள் சுரேஷ், பாலகுருசாமி, சரவணன், மாமன்ற உறுப்பினர்கள் 34வது வார்டு சந்திரபோஸ், 32வது வார்டு கந்தசாமி,பொன்னப்பன், கனகராஜ், பகுதி செயலாளர் ரவீந்திரன், ஆகியோர் முன்னிலைவகித்தனர். பின்னர் பிரச்சாரத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்:கடந்த 5ஆண்டுகால திமுக ஆட்சியில் பொருளாதாரம், தொழில் வளர்ச்சி மற்றும் ஜவுளி உற்பத்தி எனப் பல்வேறு துறைகளில் தமிழகம் முன்னேற்றம் கண்டுள்ளது. தூத்துக்குடியில் புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மழை மற்றும் வெள்ளக்காலங்களில் நிர்வாகிகளுடன் இணைந்து நான் நேரடியாகக் களத்தில் நின்று உங்களுக்காகப் பணியாற்றினேன். தொகுதி முழுவதும் தேவையான இடங்களில் அதிநவீன கண்காணிப்பு கேமராக்கள், வைஃபை வசதிகள் மற்றும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கமேம்பாலங்கள் அமைக்கப்படும்.உங்களோடு இருந்து பணியாற்றும் தனக்கு மீண்டும் 'உதயசூரியன்' சின்னத்தில்வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். இந்த பிரச்சாரத்தில் மாவட்ட துணைச்செயலாளர் ராஜ்மோகன்செல்வின், மாநில பேச்சாளர் சரத்பாலா, மாவட்ட அணி நிர்வாகி பழனி, மாநகர அணி நிர் வாகிகள் ஜீவன்ஜேக்கப், முருகஇசக்கி, வினோத், டினோ, சக்திவேல், கவுன்சிலர் இசக்கிராஜா, காங்கிரஸ் மாநில துணைத்தலைவர் சண்முகம், முன்னாள் மாவட்ட தலைவர் முரளிதரன், காங்கிரஸ் நிர்வாகிகள் மைதீன், நிர்மல்கிறிஸ்டோபர், பிரபாகரன், ஜான்சாமுவேல், தேமுதிக தொகுதி பொறுப்பாளர் வல்லரசு துரை,மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் யூசுப், விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர்விமல்வங்காளியார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் தனலட்சுமி, மார்க்கிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் முத்து, ஆதிதமிழர் கட்சி மாவட்ட செயலாளர் நம்பிராஜ் பாண்டியன், வட்டப்பிரதிநிதிகள் பாஸ்கர் , புஷ்பராஜ், முத்துராம லிங்கம், பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், மற்றும் மணி அல்பட் சுந்தர்ராஜன், உள்பட கூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கீழப்பாவூர் தெற்கு ஒன்றியம் அரியபுரம் ஊராட்சி ரகுமானியபுரம் முன்னாள் அதிமுக செயலாளர் அதிமுக மேலவை பிரதிநிதியுமான மகுது சேட் என்ற துறையப்பா அவர்கள் அழகு முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவ பத்மநாதன் ஒன்றிய கழகச் செயலாளர் ஜே கே ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் தினேஷ் குமார் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சக்திகுமார் ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் செந்தூர் முருகன் பொடியனூர் செயலாளர் சிவன் பாண்டியன் சிவசெய்லானூர் ரூபன் ஒன்றிய கவுன்சிலர் வழன் ராஜா கலகலக்கரிஞர் காளிராஜ் திருமலை குமார் முன்னாள் ஊராட்சி செயலாளர் அப்துல் காசிம் செய்யதலி சேக் சித்திக் பீர் முஹம்மது ஷாஜகான் மூக்கன் செய்யது அலி அப்துல் சேட் ,தாதா என்ற சையது சுலைமான் ,மோசின் உசேன், சுவைபு ஷேக் இஸ்மாயில் என்ற படையப்பா சிங்கை அப்துல் காதர் கோதர் மைதீன் என்ற ரஹீம் மற்றும் ஜமாத் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் 135 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை அவனியாபுரம் பகுதியில் உள்ள அம்பேத்கர் சிலைக்குமாலை அணிவித்து மரியாதை செய்தனர் திருப்பரங்குன்றம் தொகுதி திமுக வேட்பாளர் S.கிருத்திகா தங்கபாண்டி மற்றும் திமுக கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செய்தனர் காலை முதல் விடுதலை சிறுத்தை கட்சியினர் மற்றும் திமுக கட்சியின் நிர்வாகிகள் அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர் இதனைத் தொடர்ந்து மாலை அணிவித்த திமுக பித் தங்கப்பாண்டி.

# பெரம்பூர் ரயில் நிலையத்தில் ரூ.5 கோடி மதிப்பு போதைப் பொருள் சிக்கியது

சென்னை: பெரம்பூர் ரயில் நிலையத்தில் ரூ.5 கோடி மதிப்பிலான போதைப் பொ ருட்கள் சிக் கி ன . இ துகுறித்து, ஆர் பிஎஃப் போ லீஸார் விசாரித்துவருகின்றனர்.

த மி ழக சட் டப்பேர வைத் தே ர் தலை முன் னிட்டு , ப றக்கும் படை யினர்,ரயில்வே பாதுகாப் புப் படையினர் இணைந் து,ரயில் நிலையங்களில் தீ வி ர கண்கா ணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அ ந்த வகை யில், சென்னை பெ ரம் பூர் ரயில் நிலை யத்தில் மூர் மார்க்கெட் காம்ப்ளக்ஸ் ஆர் பிஎஃப் காவல் ஆய் வா ளர் அருண் குமார் தலை மை யில், உதவி ஆய் வா ள ர்கள் சி.கோ பாலகிருஷ்ணன் மற்றும் எம் .ராஜேஷ் ஆகியோர் கொ ண்ட ஆர்பிஎஃப் போலீ ஸார் நேற்று கண் காணிப்புப் பணியில் ஈடு பட்டிருந்தனர்.

அப் போது அசாம் மாநிலம் நியூ தின்சுகியா வில் இருந்து பெர ம்பூர் வழியாக பெங்களூரு நோ க் கிச் செல்லும் விரை வு ரயில் வந்தது. அ ந்த ரயிலின் பொதுப் பெட் டியில் ஆர்பி எஃப் போலீ ஸார் சோதனை மேற்கொண்டனர்.



## தூத்துக்குடியில் அம்பேத்கரின் பிறந்தநாளை முன்னிட்டு

# அவரது திருவுருவச் சிலைக்கு அமைச்சர் கீதாஜீவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

அம்பேத்கரின் பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையம் எதிரில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மதச்சார்பற்ற முற்போக்குக்கூட்டணிக் கட்சிகளின் சார்பில், திமுக வடக்கு மாவட்டச் செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், கலை இலக்கிய அணிச் செயலாளர் ஜீவன் ஜேக்கப், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் அந்தோணி ஸ்டாலின், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் அருண் குமார், முன்னாள் மேயர் கஸ்தூரி தங்கம், மாநகராட்சி தெற்கு மண்டலத் தலைவர் பாலகுருசாமி, மாநகராட்சி கவுன்சிலர் வைதேகி, போக்குவரத்துத் தொழிற்சங்கத் தலைவர் முருகன், சமத்துவமக்கள் கழகமாவட்டச் செயலாளர் மாலைசூடி அற்புதராஜ், தேமுதிக மாவட்டச் செயலாளர் தயாளலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி சட்டமன்ற தொகுதி கடையநல்லூர் தெற்கு ஒன்றியத்தில் உள்ள அதிமுக மற்றும் பாஜக நிர்வாகிகள் திமுகவில் இணைந்தனர்



தென்காசி சட்டமன்ற தொகுதி கடையநல்லூர் தெற்கு ஒன்றியம் குலய நேரி ஊராட்சி இரட்டை குளம் கிராமத்தைச் சார்ந்த அதிமுக மற்றும் பாஜகநிர்வாகிகள்திமுக கிளைக் கழகச் செயலாளர் மாடசாமி அவர்கள் ஏற்பாட்டில் இரட்டை குளம் நாட்டாமை முருகன் மற்றும் ஊராட்சி உறுப்பினர் மனோகரன் பிஜேபி தலைவர் ராஜ் என்ற லோகநாதன் ஆகியோர்கள் தலைமையில் குமார் ஆறுமுகம் தேவேந்திரன் சமுத்திரம் வைரசாமி ராம ராஜா செல்வம் கணேசன் பிரசாத் தேவா .ராமச்சந்திரன் மயில் முருகன் ராமச்சந்திரன் வேலாயுதம் மற்றும் 25க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கட்சியிலிருந்து விலகி கழக அமைப்பு இணைச்செயலாளர் அன்பகம் கலை அவர்கள் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்

நிகழ்ச்சியின் போது தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவ பத்மநாதன் ஆனைகுளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கலில் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் திருமலை குமார் சுப்பையாபுரம் திருமலைக்கனி ஒன்றிய கவுன்சிலர் சங்கர் மாவட்ட பிரதிநிதி துரைப்பாண்டியன் மேல நீலிதநல்லூர் முன்னாள் வட்டார காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் ஹரிச்சந்திரன் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஹரி கிருஷ்ணன் அசோக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்ட அனைவருக்கும் இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை அவர்கள் பொன்னாடை அணிவித்து நடைபெற இருக்கிற சட்டமன்றத் தேர்தலில் தீவிரமாக களப்பணி ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (14.04.2026) அன்று ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி சட்டமன்றத்தொகுதி, கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட அய்யம்பாளையம் பகுதியைச் சேர்ந்த சாமியப்பன் (வயது 86) தபால் வாக்கு செலுத்தியதை நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

## புரட்சியாளர் அம்பேத்கர் 135ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

# பாபுராயன்பேட்டை ஊராட்சியில் திமுக ஒன்றிய கழக செயலாளர் கோகுலகண்ணன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை



செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மாவட்ட செயலாளர் க,சுந்தர் அவர்களின் ஆணைக்கிணங்க அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய செயலாளர் கோகுல்கண்ணன் தலைமையில் பாபுராயன் பேட்டை ஊராட்சியில் உள்ள சட்ட மாமேதை சமத்துவ நாயகர் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கரின் 135 வது பிறந்தநாளில் அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்து இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய குழு உறுப்பினர் ஜெ. பார்த்தசாரதி வெங்கிடேசன்.மாவட்ட பிரதிநிதி கருணாகரன் மற்றும் ஒன்றிய ஆதி திராவிடர் அணி அமைப்பாளர் தரு.லட்சுமணன்.ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வே. ஜாணகிராமன். ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெயகுமார் ஊராட்சி மன்ற தலைவர்கள் மின்னல்பாலாஜி.ச.சுதாகர்.மு ஊராட்சி மன்ற தலைவர் ந.ஏழுமலை துணை தலைவர் பக்தவத்சலம் மற்றும் கழக முன்னோடிகள் த. சண்முகம்.ம.மாரி.லட்சுமணன்.தன்ராஜ். கல்லியகுணம்.கிளை செயலாளர் முருகன்.கிளை இளைஞர் அணி அமைப்பாளர்கள் ர.தமிழ்செல்வன். லோகு சிவராஜ்.மற்றும் பல கழக முன்னோடிகள் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஏற்பாடு கிளைச் செயலாளர்கள் .ஏ. இரமேஷ்குமார் முன்னணியில் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## காமராஜர் பிறந்த மண்ணில் விஜய பிரபாகரன் போட்டிருக்கிறார்

# அவரை வெற்றி பெறச் செய்ய காங்கிரஸ் 100% முழுமனதோடு பணியாற்றுகிறது

## விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் எம் பி மாணிக்க தாகூர் பேட்டி



சீட்டு கிடைக்காத அண்ணாமலை ஒரு பேப்பரை காட்டி பேசுவாப்ல அந்த பேப்பர் வெறும் பேப்பரா கூட இருக்கலாம் அல்வாவுக்குப்பெயர்போனவர் அண்ணாமலை-மதுரைக்கு மெட்ரோ வருவதற்கு பாஜக அரசு தடை போடுது அதை எதிர்த்து போராடுவோம்.

மதுரை வடக்கு கேட்டதால் உசிலம்பட்டி மேலூர் தொகுதி காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது - ஏழு பேர் கொண்ட குழுவிடம் தான் கேட்க வேண்டும்.

எடப்பாடி பழனிச்சாமி தற்குறி என்று சொன்ன அண்ணாமலை இன்று அவரை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக பிரச்சாரம் செய்கிறார் - மாணிக் தாகூர்

சட்டமேதை அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளை ஒட்டி மதுரை திருநகரில் உள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் பேசியதாவது: இந்திய அரசியலமைப்புச் சாசனத்தை இயற்றியவர், இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர், ஏழை எளிய மக்களால் போற்றப்படும் தலைவர் பாபாசாகேப் அம்பேத்கர். அவருடைய வழிகாட்டுதலில் உருவான அரசியலமைப்பை, மோடி அரசு தொடர்ந்து அவமதித்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தொடர் திடீரென செப்டம்பர் 16, 17, 18 ஆகிய தேதிகளில் கூட்டப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் தொகுதி மறுவரையறை (Delimitation) சட்டம் கொண்டு வரப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதுள்ள 545 தொகுதிகளுடன் கூடுதலாக 272 புதிய தொகுதிகளை உருவாக்கி, மொத்த எண்ணிக்கையை 812 ஆக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களிடமோ அல்லது மாநில முதலமைச்சர்களிடமோ எந்த ஆலோசனையும் நடத்தப்படவில்லை.

தமிழகத்தில் ராகுல் காந்தி எப்பொழுது தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகிறார்? முதலமைச்சருடன் இணைந்து பிரச்சாரம் செய்கிறாரா? என்ற கேள்விக்கு: ராகுல் காந்தி அவசியம் வருகிறார்.எல்லாருக்கும் தெரியும் புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டதால் ராகுல் காந்தி வொர்க்கிங் கமிட்டி காங்கிரஸினுடைய காரியக்கமிட்டி கூட்டம் நடைபெற்றது. அதற்குப் பின்னாலே 12-ம் தேதி அம்பேத்கருடைய பிறந்தநாளை முன்னிட்டு 'ரன் ஃபார் அம்பேத்கர்' என்று ஒரு மிகப்பெரிய ஓட்டம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது டெல்லியில். அலிப்பூர் ரோட்டில் எங்கு அம்பேத்கர் தங்கியிருந்தாரோ, அந்த வீடு வரையிலான ஒரு ஓட்டம். அதற்காக ஒரு நாளும், இன்று ராகுல் காந்தி அவர்கள் பெங்காலியில் மூன்று பிரச்சாரக் கூட்டங்களில் பங்கெடுக்கிறார். நாளை எதிர்க்கட்சித் தலைவருடைய கூட்டம். நாளை மறுநாள் மூன்று நாள் நாடாளுமன்றம் நடக்குது. ரொம்ப முக்கியமான நாடாளுமன்றக் கூட்டம். அதனால ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும். நாடாளுமன்றக் கூட்டத்தொடர் முடிந்தவுடன் கடைசி நான்கு நாட்கள் பிரச்சாரம் இருக்கிறது.அந்த நான்கு நாட்களில் அவசியம் ராகுல் காந்தி வருவார் என்பது மிகத் தெளிவாகத் தெரியும். ராகுல் காந்தி மட்டுமல்ல,பிரியங்கா காந்தி அவர்களும் பிரச்சாரத்திற்குவர இருக்கிறார் தமிழ்நாட்டிற்கு.

மதுரை வடக்கு தொகுதியை கேட்டு வீர வசனம் பேசிய மாணிக்கம் தாகூர் அதை பெற முடியாத நிலையில் தன்னை பற்றி குறை கூற தகுதி இல்லை என அண்ணாமலை பேசியது குறித்த கேள்விக்கு: மதுரை வடக்கு பற்றித் தம்பி கேட்டான். மதுரை வடக்கு கேட்டோம். கூட்டணியில் யார் பேசுனாங்களோ அவங்ககிட்ட கேக்கச் சொல்லுங்க. திமுகவோட ஏழு தலைவர்கள் உறுப்பினர்கள் இருந்தாங்க, ஏழு பேருக்குத் தெரியும் காங்கிரஸ் கட்சி வடக்கு எவ்வளவு வேகமா கேட்டுச்சுன்னு. வடக்கு கேட்டதற்காக இரண்டு தொகுதி காங்கிரஸ் கட்சிக்கு மதுரை மாவட்டத்தில குடுத்துருக்காங்க . உசிலம்பட்டியும் மேலூரும் வந்துருக்கு.

அதாவது ஒருதெய்வமகனாக இருந்த திருமணம் செய்து கொள்ளாமல் ஏழைகளுக்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் குரல் கொடுத்த தைரியமாக குரல் கொடுத்த தேவர் எங்க? இங்க பார்த்தீங்கன்னா இது ரியல் எஸ்டேட் பார்த்துகிட்டு இருக்கிற அண்ணாமலை எங்க? மதுரை மேற்கு மக்கள் அவசியம் செல்லூர் ராஜுக்கு இதற்குப் பதிலடி கொடுப்பார்கள். நம்ம தெய்வமாகப் போற்றப்படும் தேவரை அண்ணாமலையோடு ஒப்பிட்டது மிகப்பெரியதப்பு.அதற்குச் செல்லூர் ராஜு மன்னிப்பு கேட்க வேண்டும்.

தேர்தல் முடிவுக்கு பிறகு அதிகார பகிர்வு குறித்து பேசுவீர்களா என்ற கேள்விக்கு: அஞ்சாம் தேதி தேர்தல் ரிசல்ட் வந்தவுடனே பேசுவோம் என்றார்

### அன்னல் அம்பேத்கரின் 136வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு

# கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக, மலர் தூவி மரியாதை



சட்ட மாமேமை அண்ணல் அம்பேத்கரின் 136வது பிறந்தநாளை முன்னிட்டு, கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று, அம்பேத்கர் பிறந்தநாள் விழா கொண்டாட பட்டது.தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும், கோவை கவுண்டம்பாளையம் சட்ட மன்ற தொகுதி வேட்பாளருமான வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இந்த விழாவுக்கு தலைமை தாங்கினார். தொடர்ந்து அம்பேத்கர் திருவுருவ படத்திற்க்கு மலர் தூவி மரியாதை செலுத்த பட்டது. மேலும் அவரது பிறந்தநாளை முன்னிட்டு இனிப்புகள் வழங்க பட்டது. மேலும் அம்பேத்கரின் நினைவுகள், அவர் செய்த தியாகங்கள்,சட்ட வியூகங்கள், குறித்து விளக்கவுரை எடுத்து கூறபட்டது.

அப்பொழுது வழக்கறிஞர் புஸ்பாணந்தம் கூறியதாவது..

சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பணியாற்றியதாகவும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவுக் குழுத் தலைவராக இருந்து, உலகின் மிகச்சிறந்த அரசியலமைப்பை உருவாக்கியதாகவும் கூறினார்.

இந்திய ரிசர்வ் வங்கி உருவாவதற்கு அம்பேத்கரின் 'ரூபாயின் சிக்கல்' தி பிராப்ளம் ஆப் தி ரூபி என்ற ஆய்வுக் கட்டுரை முக்கிய அடிப்படையாக இருந்ததாகவும் கூறினார். இந்து வாரிசுரிமைச் சட்டம் மூலம் பெண்களுக்கான சொத்துரிமை மற்றும் சம உரிமைகளுக்காகப் போராடியவர் அன்னல் அம்பேத்கர், இவரது பிறந்தநாளில் அவரை கொண்டாடுவது நெகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது என்றார்.

இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் குமாஸ்தா செல்வராஜ், ஜெபா, வர்ஷா, வர்ஷினி, மோகன் ராஜா, தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை தெற்கு தொகுதி சட்ட மன்ற வேட்பாளர் மகேஷ்வரன், வேல் முருகன், கிருஷ்ணமூர்த்தி, பாலகிருஷ்ணன், காங்கிரஸ் பால் ராஜ், பீட்டர், அரசு பணி நிறைவு தனபாலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் , அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் மனோகரன், ஈரோடு மேற்கு சட்டமன்ற தமிழக வெற்றி கழக வேட்பாளர் ஆனந்த் மோகன், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தமிழக வெற்றி கழக வேட்பாளர் பாலாஜி ஆகியோர் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் அலுவலகத்திற்கு வருகை தந்து வாக்கு சேகரித்த பொழுது, அனைத்து வேட்பாளர்களையும் வரவேற்று மரியாதை செய்து, வாக்கு சேகரிப்புக்கு வழிவகை செய்து, தொழில் சார்ந்த கோரிக்கை மனுக்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில தலைவர் எல் கே.எம். சுரேஷ், மாநில பொருளாளர் சித்தோடு கே பாலசுப்பிரமணியம் , இணைச் செயலாளர் லக்காபுரம் பாலசுப்பிரமணியம் மற்றும் ஈரோடு விசைத்தறி உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ராசு என்கின்ற பழனிசாமி,பொருளாளர் செல்லாராம் மணி , இணை பொருளாளர் விஸ்வநாதன்,துணைத்தலைவர் ஜெகநாதன்,துணைச் செயலாளர் நவீன் பூபதி ,செய்தி தொடர்பாளர் சுரேஷ் , இணை செய்தி தொடர்பாளர் தர்மலிங்கம் ,இணை ஒருங்கிணைப்பாளர் தியாகு ,வீரப்பன் சத்திரம் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் ஞான முருகன் ராஜா,& எல் என்.சி.சந்திரன் மற்றும் ஈரோடு விசைத்தறி உரிமையாளர்கள் சங்க செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்





டாக்டர் சட்டமேதை அம்பேத்கர் 135 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சிதுறை மதுவிலக்குஆயத்தீர்வைதுறைஅமைச்சர்சு.முத்துசாமி பெரியார் நகர் அமைச்சர் முகாம் அலுவலகத்தில் அமைக்கப்பட்ட அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.அதன் பிறகு அடுத்த நிகழ்வாக பன்னீர்செல்வம் பூங்காவில்அமைந்துள்ளஅவரதுமுழுஉருவசிலைக்குமலர்தூவிமரியாதைசெலுத்தினார். உடன் திமுக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் ப. செல்வராஜ் ,ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் மற்றும் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் செந்தில்நாதன் ,ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (14.04.2026) அன்று ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையங்களை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (14.04.2026)அன்று ஈரோடு மாவட்டம்,மொடக்குறிச்சி சட்டமன்றத்தொகுதி, கொடுமுடி ஸ்ரீ மகுடேஸ்வரன் திருக்கோயில் வளாகத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வழியுறுத்தி நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்று பேசியபோது எடுத்த புகைப்படம்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி நேற்று (14.04.2026) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி சட்டமன்றத்தொகுதி, கொடுமுடி பேரூராட்சிக்குட்பட்ட ஏமகவுண்டனூர் பகுதியில் பாகம் எண் 263 உட்பட்ட பகுதியில் வாக்காளர் தகவல் சீட்டு வழங்கப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



கிறிஸ்தவ நல அமைப்பு ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வு சந்திப்பில் C.S.I பொதுசெயலாளர் வழக்கறிஞர் (தமிழக சிறுபான்மை மேம்பாட்டு கழகம்) பெர்ணான்ட்ஸ் ரத்தின ராஜா அவர்கள் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ஈரோடு மேற்கு சட்டமன்ற வேட்பாளர் சு.முத்துசாமி , ஈரோடு கிழக்கு சட்டமன்ற காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன், மொடக்குறிச்சி சட்டமன்ற திமுக வேட்பாளர் செந்தில்நாதன் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து சிறப்புறை ஆற்றினார்.



152விருத்தாச்சலம் சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 'முரசு' சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்கள், நல்லூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் தனது முதல் நாள் தேர்தல் பிரச்சாரத்தை சாத்தியம் ஊராட்சியில் தொடங்கினார். தொடர்ந்து, ஏ. சித்தூர், வண்ணாத்தூர், தருசு, நல்லூர், கிராமங்களில் பிரச்சாரம் செய்து நகர் கிராமத்திற்கு வந்த பிரேமலதா விஜயகாந்த் அவர்களை மாவட்ட கவுன்சிலரும், திமுக மாவட்ட கழகப் பிரதிநிதிமான நகர் சி. சக்திவினாயகம் தலைமையில் 100 க்கும் மேற்பட்டோர் பட்டாசு வெடித்து உற்சாகமாக வரவேற்றனர். தொடர்ந்து, வேட்பாளருக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டதுடன், தனது சொந்த செலவில் அச்சிட்ட 2000க்கும் மேற்பட்ட துண்டு பிரசுரங்கள் வீடு வீடாகச் சென்று விநியோகிக்கப்பட்டன.



சேலம் மாவட்டம் ஓமலூரில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்த நாளை முன்னிட்டு ஓமலூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு ஓமலூர் சட்டமன்ற தொகுதியை மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தேமுதிக வேட்பாளர் A.R.இளங்கோவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# மக்களின் தேவைகள் அறிந்து ஆட்சி செய்வதில் திமுகவுக்கு நிகர் திமுகதான்:

## வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவுடன் இணைந்து செயல்படுவதாக இந்திய ஒற்றுமை இயக்கம் மற்றும் கோவை முற்போக்கு இயக்கங்கள் அறிவிப்பு



கோவை உப்பிலிபாளையம் பகுதியில் உள்ள பத்திரிக்கையாளர் மன்றத்தில் இன்று இந்திய ஒற்றுமை இயக்கம் மற்றும் கோவை முற்போக்கு இயக்கங்கள் சார்பில் செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. அப்பொழுது பேசிய பேராசிரியர் காமராஜ்கூறியதாவது..தமிழ்நாடு17வதுசட்டமன்றத் தேர்தலை, வருகின்ற ஏப்ரல் 23ஆம் தேதி நடத்த, உள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இதுவரையும் நடந்த சட்டமன்ற தேர்தலை போல் இந்த தேர்தலும் ஒன்று என கருதி விட முடியாது, காரணம் பாரதிய ஜனதா கட்சியும், ஆர்எஸ்எஸ்-ம் கையாண்ட பிற்போக்குவாத கோட்பாடுகளும்,, மதவெறி அரசியலும், அதன் விளைவாக கடந்த 12 ஆண்டுகளாகஒன்றியத்தில்ஆட்சியைதக்கவைத்துக் கொண்டிருக்கும்பாஜகஆட்சியில்சமூகபொருளாதார அரசியல் அமைப்பிலும், நாடு கடுமையான பின்னடைவை சந்தித்துக் கொண்டிருக்கின்றது. இந்தியாவின் பலமும், தனித்தன்மையும், அதன் பன்முக தன்மையே, இதனை அழித்தொழிக்க ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, என்ற ஒற்றை கோட்பாட்டு அரசியலை, பாரதிய ஜனதா கட்சி முன்னெடுத்து வருகின்றது. எனவே பிற்போக்கு, பிளவாத, சித்தாந்த கோட்பாடுகளுக்கு எதிராக, நிற்கும் ஜனநாயக சக்திகள், கட்சிகள், மற்றும் தமிழ்நாட்டின் வெகுஜன மக்களுக்கான,தேர்தல் இது எனவும், இந்த தேர்தலில் திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கோவை முற்போக்கு இயக்கங்கள் மற்றும் இந்திய ஒற்றுமை இயக்கம் பரப்புரை மேற்கொள்ளதுடன், திமுகவிற்காக வாக்கு சேகரிக்க இருப்பதாக தெரிவித்தார்.

# Samrat Choudhary: First BJP CM in Bihar comes with family legacy; was Rabri's minister in RJD govt, also in JD(U)



*Samrat Choudhary comes from strong political family; father Shakuni was 6-time MLA, mother Parvati also was MLA; he remained minister in Rabri-led RJD govt*

*Samrat Choudhary will take over the reins of Bihar from Nitish Kumar, the BJP announced on Tuesday. A senior leader of the party and currently the deputy chief minister, he is expected to take oath on April 15 as CM.*

*Early life and political background*

*Samrat Choudhary comes from a strong political family in Bihar. His father, Shakuni Chaudhary, was a six-time MLA from Tarapur, while his mother Parvati Devi also served as a legislator. This legacy gave him an early entry into politics.*

*He began his career in 1999 with the Rashtriya Janata Dal and quickly rose through the ranks. In 2000, he was elected as an MLA from Parbatta in Khagaria and became a minister in the government led by Rabri Devi.*

*Political journey across parties*

*Choudhary's career has been shaped by key political shifts. After years in the RJD, he joined the Janata Dal (United) in 2014 and served as a minister in the government headed by Jitan Ram Manjhi.*

*In 2017, he moved to the BJP, where his rise was rapid. He held organisational roles such as state vice-president and later became the party's Bihar unit president in 2023. In January 2024, he was appointed deputy chief minister in the NDA government led by Nitish Kumar.*

*Role in Bihar politics*

*Samrat Choudhary is considered one of the BJP's prominent OBC faces in Bihar, a state where caste dynamics play a crucial role in electoral politics. As a key strategist and campaigner, he has been central to the party's outreach and organisational expansion.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.